*கவனிக்க.- 2020.08.28 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II மற்றும் பகுதி IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2192 - 2020 සැප්තැම්බර් මස 04 වැනි සිකුරාදා - 2020.09.04

*2192 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 04 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

**(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)**


| | பக்கம் |
|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் | 1364 |
| துணைவிதிகள் | - |
| உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - |
| வரவு செலவுக் கூற்றுகள் | - |
| வரவு செலவுத் திரட்டுகள் | - |
| ஆதன விற்பனைகள் | - |
| ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| வீதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் | - |
| நானாவித அறிவித்தல்கள் | 1370 |


**வாராந்த வர்த்தமானிகளில் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* **இரண்டு வாரங்களுக்கு முன்னர்,** *அதாவது 2020, செத்தெம்பர் மாதம் 25 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2020, செத்தெம்பர் மாதம் 11 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2020 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

1363 - B82056- 5,403 (2020/ 09)

# உள்ளூராட்சி அறிவித்தல்கள்

**ஊர்காவற்றுறை பிரதேச சபை**

*1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூர் அதிகார சபைகளின் (நியமத் துணைவிதிகள்) சட்டம்*

*1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூர் அதிகார சபைகளின் (நியமத் துணைவிதிகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவில் (1) ஆவது உப பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி, 2019 ஆம் ஆண்டு மார்கழி மாதம் 16 ஆந் திகதிய சபைக்கூட்டத்தின் 09 ஆம் இலக்க தீர்மானத்தின்படி ஊர்காவற்றுறை பிரதேச சபையால் கீழ்க்குறிப்பிடப்படும் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என இத்தால் அறியத்தருகின்றேன்.*

*மருதையினார் ஜெயக்காந்தன்*
*தவிசாளர்,*
*ஊர்காவற்றுறை பிரதேச சபை,*
*ஊர்காவற்றுறை*

*ஊர்காவற்றுறை பிரதேச சபை,*
*ஊர்காவற்றுறை,*
*2020.07.17*

**தீர்மான இலக்கம் - 09 - 16.12.2019**

*1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க,மாகாண சபைகள் (இடைநேர் விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (1)ஆவது உப பிரிவின் (அ) பந்தியுடன் சேர்த்து வாசிக்கப்படும் 1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, உள்ளூர் அதிகார சபைகள் (நியமத் துணைவிதிகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவில் (1) ஆவது உப பிரிவில் வடக்கு மாகாண சபையின் உள்ளூராட்சி விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சருக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் படி வடக்கு மாகாண உள்ளூராட்சி விடயங்களுக்குப் பொறுப்பான அமைச்சரினால் தயாரிக்கப்பட்டு 2092/6 ஆம் இலக்க,2018.10.08 ஆந் திகதிய வர்த்தமானப் பத்திரிகை (அதி விசேடமானது) மூலம் பிரசுரிக்கப்பட்டுள்ள வடக்கு மாகாண பிரதேச சபைகளுக்காக அங்கீகரிக்கப்பட்ட நியமத் துணைவிதிகள் அத்தியாயம் 07 முதல் 09 வரையானவற்றை ஊர்காவற்றுறை பிரதேச சபையின் அதிகாரப் பிரசேத்திற்குள் வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் திகதியிலிருந்து நடைமுறைப்படுத்துவது என்றும் மேலே கூறப்பட்ட1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க (அத்தியாயம் 261) நியமத் துணைவிதிகள் சட்டத்தின் 3 ஆவதுபிரிவின் (1) ஆவது உப பிரிவின் பிரகாரம் தீர்மானிக்கப்பட்டு சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.*

*09 - 12/1*

---

**ஊர்காவற்றுறை பிரதேச சபை**

**தீர்மான இலக்கம் - 05 - 12.05.2020**

*சபையின் JCB வாகனத்திற்கான கட்டண அறவீடானது மணித்தியால மானி வாசிப்பின் படி ரூபா 2,500.00 எனவும் 03 மணித்தியாலத்திற்கு உட்பட்ட வேலைக்காக செல்லும் போது, அலுவலகத்திலிருந்து வேலைத்தளத்திற்கு செல்வதற்கான மற்றும் வேலைத்தளத்திலிருந்து அலுவலகத்திற்கு வரும் வரையான கட்டணமும் உள்ளடங்கலாக அறவீடு செய்வதெனவும் 03 மணித்தியாலத்திற்கு மேற்பட்ட வேலைகளுக்காக செல்லும்போது, அலுவலகத்திலிருந்து வேலைத்தளத்திற்கு செல்வதற்கான கட்டணத்துடன் அறவீடு செய்வதெனவும் தீர்மானிக்கப்பட்டு சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.*

*மருதையினார் ஜெயக்காந்தன்*
*தவிசாளர்,*
*ஊர்காவற்றுறை பிரதேசசபை,*
*ஊர்காவற்றுறை*

*முன்மொழிவு : திரு. கு. கிளாறன்ஸ்*
*வழிமொழிவு : திரு. க. சகாதேவன்*
*ஊர்காவற்றுறை பிரதேசசபை,*
*ஊர்காவற்றுறை,*
*2020.07.17.*

*09 - 12/2*

**உடுபத்தாவ பிரதேச சபை**

*மாடுகளை வெட்டுவதற்கான கட்டளைச் சட்டம்*

*இங்கு கீழ்க் காட்டப்பட்டுள்ள உப அட்டவணையில் பெயர்க் குறிப்பிடப்பட்டுள்ளவரினால் அவரது பெயரின் முன்னால் குறிப்பிடப்பட்டுள்ள இடத்தில் 2020 ஆம் ஆண்டு தொடக்கம் மாடுகளை வெட்டும் நிலையத்தைக் கொண்டு நடாத்துவதற்காக உரிமப்பத்திரம் கோரி என்னிடத்தில் விண்ணப்பப்பத்திரம் சமர்ப்பித்துள்ளனர் என்றும் அவ் உரிமப்பத்திரம் வழங்குவது சம்பந்தமாக உடுபத்தாவ பிரதேச சபை அதிகார பிரிவில் குடியிருக்கின்ற எவர் ஒருவர் எதிர்ப்பு தெரிவிப்பாராயின், அவர் அல்லது அவளினால் எதிர்ப்பு தெரிவிப்பது எக் காரணத்திற்காக என்பது பற்றி 02 பிரதியுடனான ஆவணம் ஒன்றினை இவ் அறிவித்தல் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் IV (ஆ) பகுதியில் பிரசுரிக்கப்பட்ட திகதி தொடக்கம் 14 நாட்களினுள் எனக்கு அனுப்ப வேண்டும். மாடுகளை வெட்டும் கட்டளைச் சட்டத்தின் 272 ஆம் அதிகாரத்தில் இலக்கம் 7(2) ஆம் பிரிவின் கீழ் இத்துடன் அறிவித்தல் விடுக்கின்றேன்.*

*எச். எம். ராஜ் சிசிர குமார,*
*தலைவர்,*
*உடுபத்தாவ பிரதேச சபை.*

*பிரதேசசபை அலுவலகம்,*
*உடுபத்தாவ,*
*2020, யூலை 30.*

| *கோரிக்கையாளரின் பெயர் மற்றும் முகவரி* | *மாடுகளை வெட்டும் இடத்தை கட்டமைக்கப்படுகின்ற நிலையம்* |
|---|---|
| *1. எம். எச். எம். இனாமுல்லா, திவுரும்பொல* | *திரு. ஏ. எஸ். எம். ரிஸ்மி அவர்களுக்கு உரிய எதுன்கஹ கொட்டுவ கோன்கஹமுல்ல ஹேன்யாய மற்றும் குளியாபிடிய தோட்ட காணி* |

*09 - 66*

---

**கருவலகஸ்வெவ பிரதேச சபை**

*1952 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க, உள்ளூராட்சி சபைகள் (அங்கீகரிக்கப்பட்ட துணைவிதி) சட்டம்*

*1952 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க உள்ளூராட்சி சபைகள் (அங்கீகரிக்கப்பட்ட துணைவிதி) சட்டத்தின் (அத்தியாயம் 261) பிரிவு 03 இன் உப பிரிவு (i) இன் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் கீழ் கருவலகஸ்வெவ பிரதேச சபையில் 2020 யூலை 09 அன்று இடம் பெற்ற பொதுக் கூட்டத்தில் பின்வரும் பிரேரணை நிறைவேற்றப்பட்டது என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

*டபிள்யூ. பீ. நிமால் ஜயசிறி பண்டார,*
*தவிசாளர்,*
*கருவலகஸ்வெவ பிரதேச சபை.*

*பிரதேசசபை அலுவலகம்,*
*கருவலகஸ்வெவ,*
*2020, யூலை 22.*

**1952 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க உள்ளூராட்சி சபைகள் (அங்கீகரிக்கப்பட்ட துணை விதி) சட்டம்**

*1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபை (இடைநேர்விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் 02 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 1952 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க உள்ளூராட்சி (அங்கீகரிக்கப்பட்ட துணைவிதி) சட்டத்தின் கீழ் உள்ளூராட்சி விடயத்துக்குப் பொறுப்பான வடமேல் மாகாண அமைச்சரால் தயாரிக்கப்பட்ட 1930/6 எனும் இலக்கமுடைய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2015.08.31 ஆந் திகதியிடப்பட்ட வர்த்தமானியின் (iv) (அ) பிரிவின் கீழ் வெளியிடப்பட்ட அத்துடன் வடமேல் மாகாண சபையினால் அங்கீகரிக்கப்பட்டு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2015.08.31 ஆந் திகதியிடப்பட்ட 1930/6 எனும் இலக்கமுடைய அதிவிசேட வர்த்தமானியில் அறிவிக்கப்பட்ட கூட்டங்களை நடத்துவதற்கான குழுக்களை உருவாக்குதல், நியதி அறிக்கைகள் தகவல்களை சமர்ப்பித்தல், கட்டுப்படுத்தல், நிருவாகம், தகனச் சாலைகளுக்கு கட்டணங்களை அறவிடுதல், கட்டுப்பாடு, ஒழுங்குபடுத்தல், மேற்பார்வை மற்றும் மரணச் சடங்கு சேவைகளை வழங்குவோரிடமிருந்து கட்டணங்களை அறவிடுதல் தொடர்பான துணைவிதியை 1952 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க உள்ளூராட்சி சபைகள் (அங்கீகரிக்கப்பட்ட துணைவிதி) சட்டத்தின் 03 ஆம் பிரிவின் (i) ஆம் உப பிரிவின் கீழ் ஏற்று பின்பற்றுவதற்கு கருவலகஸ்வெவ பிரதேச சபை தீர்மாம் நிறைவேற்றியுள்ளது என இவ்வர்த்தமானி அறிவித்தல் மூலம் அறிவிக்கப்படுகின்றது.*

*09 - 106*

---

**திக்வெல்ல பிரதேச சபை**

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின்*
*பிரிவு 24 (1) (ஆ) விளம்பரம் கீழ்*

*தென் மாகாணத்தின் மாத்தறை மாவட்டத்தில் திக்வெல்ல பிரதேச சபையால் 1989 ஆம் ஆண்டின் 15 ஆந் திகதி பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 24(1) இன் படி 23.10.2018 அன்று நடைபெற்ற பொதுக்கூட்டத்தில், திக்வெல்ல பிரதேச சபை முடிவு எண் 5.19.1/ 5.19.2 இன் கீழ் ஒரு சாலையாக அறிவிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.*

*இந்த அறிவிப்பை அரசிதழில் வெளியிட்ட நாளிலிருந்து ஒரு மாதத்திற்குள் அதன் உரிமை கோரளை நிரூபிக்க 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 24(2) அதன்படி செயல்படும்படி கேட்கப்படுகின்றீர்கள்.*

*இந்த காலகட்டத்தில் இந்த அறிவிப்புக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை என்றால், அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள சாலைகள் திக்வெல்ல பிரதேச சபைக்கு சொந்தமான சாலைகள் என்று பொது மக்களுக்கு இதன் மூலம் அறிவிக்கின்றேன்.*

*கித்சர முதுகுமாரன,*
*தலைவர்,*
*திக்வெல்ல பிரதேச சபை.*

*பிரதேசசபை அலுவலகம்,*
*திக்வெல்ல,*
*2020, ஓகத்து 17.*

**அட்டவணை**

| வரிசை எண் | சாலையின் பெயர் | வீதியின் ஆம்பம் | வீதியின் முடிவு | வீதியின் வலது பக்கத்தில் காணி | வீதியின் இடது பக்கத்தில் காணி | வீதியின் நீளம் (m) | வீதியின் அகலம் (cm) |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | சுஹந்தா மாவத்தை | இலககோடா சாலை | திரு. W.L.A. பிரியந்தா | 1. திரு. யூ. டி. சுனில் ரஞ்சித்தின் காணி | 1. திரு. டி. ஏ. பிரேமதாச வின் காணி<br>2. திரு. ஜி. பி. பியதாசவின் காணி<br>3. திரு. மதுஷனின் காணி<br>4. திரு. எம். கே. ஜெயகொடி யின் காணி | 70 | 03 |

| வரிசை எண் | சாலையின் பெயர் | வீதியின் ஆம்பம் | வீதியின் முடிவு | வீதியின் வலது பக்கத்தில் காணி | வீதியின் இடது பக்கத்தில் காணி | வீதியின் நீளம் (m) | வீதியின் அகலம் (m) |
|---|---|---|---|---|---|---|---|
| 02 | கடல் பார்வை கார்டன் அவென்யூ | திரு. பியசேன ருவன் பதிரா னாவின் காணி | திரு. யூ. ஜீ. பேமதிலகவின் காணி | 1. திரு. ஏ. கே. சந்திமா மதுஷங்காவின் காணி<br>2. திரு. வனிகசேகரவின் காணி<br>3. திரு. தயாரத்னாவின் காணி | 1. திருமதி லட்சுமி நாணயக் காரவின் காணி<br>2. திரு. ஹெச்பி தயாரத்ன வின் காணி<br>3. திரு. ஏ. பி. இந்துனில் காணி<br>4. திரு. சிரிபால சமர சிங்கவின் காணி | 230 | 3 |

09 - 107

---

## குருநாகல் பிரதேச சபை

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 24(1) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 24(1) ஆம் பிரிவின் பிரகாரம் வடமேல் மாகாணத்தின் குருநாகல் மாவட்டத்தில் குருநாகல் பிரதேச சபை மூலம் கீழ்க் குறிப்பிடப்பட்டிருக்கும் திட்ட இலக்கம் 2457 இன் கீழ்க் குறிப்பிடப்பட்டிருக்கும் சாலை குருநாகல் பிரதேச சபையின் சாலை என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

02. தற்போது பிரதேச சபை மூலம் அளக்கப்பட்டு குறிப்பிடப்பட்டிருக்கும் இந்த சாலை சம்பந்தமாக காணி உரிமையாளராக உரிமை கோரும் கட்சியின் மூலம் எதிர்ப்புக்கள் இருப்பின் இவ் அறிவித்தல் வெளியிடப்பட்டு ஒரு மாதத்திற்குள் தன்னுடைய உரிமையை ஆதாரப்படுத்துவதற்கு 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கமுடைய பிரதேச சபை சட்டத்தின் 24(2) ஆம் பிரிவின் பிரகாரம் செயற்படுத்தும் வகையில் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.


03. இக்கால இடைவேளைக்குள் எதிர்ப்புகள் ஏதும் சமர்ப்பிக்கப்படாவிடின் கீழ்க் குறிப்பிடப்படும் சாலை குருணாகல் பிரதேச சபைக்குரிய சாலையாக ஏற்றுக்கொள்ளப்பட்டு பிரதேச சபை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்படும் என பொது மக்கள் தெரிந்து கொள்வதற்காக இத்தால் அறியத்தருகின்றேன்.

ஆர். பி. அசல நிமன்த விக்கிரமதிலக,
தவிசாளர்,
குருநாகல் பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
மல்பிட்டிய, போயகனே,
குருநாகல்,
2020, யூலை 05.

**வெஹெரபென்த கிராம அலுவலர் பிரிவின் பதுவத்த வெட்டாரகொட கிளைப் பாதை**

| *வீதியின் பெயர்* | *வீதியின் ஆம்பம்* | *வீதியின் முடிவு* | *வீதியின் ஆரம்பத்தில் இருந்து இறுதி வரை இடதுபக்க காணி உரிமையாளர் களின் பெயர்கள்* | *வீதியின் ஆரம்பத்தில் இருந்து இறுதி வரை வலதுபக்க காணி உரிமையாளர் களின் பெயர்கள்* | *கிராம அலுவலர் பிரவு மற்றும் இலக்கம்* | *வீதியின் நீளம்* | *வீதியின் அகலம்* |
|---|---|---|---|---|---|---|---|
| பதுவத்த வெட்டார கொட கிளைப் பாதை | வெஹெர பென்த பாதை | டபிள்யூ. லலித் வீரரத்ன இனால் உரிமை கோரும் காணி | டபிள்யூ. எம். சம்பிகா சாந்தனி | பி. ஜி. டி. பி. சன்ஜீவனி | இல. 808 வெஹெர பென்த | 208 | 3.6 |
| | | | ஆர். பி. ஆரியலதா | டி. எஸ். ஏ. எம். மாலின் | | | |
| | | | எல். எம். என். சாநோனா | எச். கே. எஸ். எம். டி. நோனிஸ் | | | |
| | | | ஏ. எம். நாமரத்ன | டபிள்யூ. பி. சிறியானி பிரியந்தி | | | |
| | | | எச். எம். குணவதி மெனிகே | ஏ. பீ. ஜி. மனோஜ் ரங்கன | | | |
| | | | டபிள்யூ. லலித் வீரரத்ன | டி. எஸ். பதிராஜ | | | |


152
මියාපදිංචි බලපත්‍ර මිනින්දෝරු
දුරකථනය: 037 2224639
ඩබ්ලිව්.එම්.ඒ. ජිරරත්න
(මුළු දුර මීටර් 208)
නිවැරදි කළේ -2019.05.16

# நானாவித அறிவித்தல்கள்

## வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேசசபை

*அனுமதியற்ற கட்டடங்களுக்கான தண்டப்பணம் அறவிடுதல் - 2020*

*வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை எல்லைக்குள் முன் அனுமதி பெறாமல் கட்டடங்கள் கட்டியவர்களுக்கான தண்டம் 2019.10.24 ஆந் திகதிய 66/2019.10.24 ஆம் இலக்க சபை தீர்மானத்தின் படி கீழ்க் காணப்படும் அட்டவணைப்படி அறவிடப்படும் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.*

*த. ஐங்கரன்,*
*தலைவர்,*
*வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேசசபை,*
*கரவெட்டி.*

*பிரதேச சபை அலுவலகம்,*
*கரவெட்டி,*
*2020, ஓகத்து 11.*

**தீர்மானம்**

*மேவிய கட்டடங்களுக்கான தண்டப்பணமானது 2019.10.14 ஆந் திகதிய வீடமைப்பு குழுக்கூட்டத்தில் அட்டவணையில் உள்ளவாறு அறவிடுவதற்கு வீடமைப்புக் குழுவால் சிபாரிசு செய்யப்பட்டுள்ளது. இதன் பிரகாரம் தண்டப்பண அறவீட்டினை வர்த்தமானியில் பிரசுரித்து அறவிடுவதற்கு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.*

**அட்டவணை**

| தொ. இல. | அனுமதியற்ற கட்டப்பட்ட கட்டட விபரம் | தண்டப்பணம் (ரூபா) வதிவிடம் | வர்த்தக நடவடிக்கை |
|---|---|---|---|
| 1 | அத்திவார வேலை மட்டும் (சதுர மீற்றர்) | 75.00 | 250.00 |
| 2 | கூரை மட்டம் வரை (கூரை நீங்கலாக) (சதுர மீற்றர்) | 125.00 | 500.00 |
| 3 | கூரை உட்பட நிர்மாணம் (சதுர மீற்றர்) | 175.00 | 750.00 |
| 4 | நிர்மாணம் பூர்த்தி செய்யப்படல் (சதுர மீற்றர்) | 225.00 | 1000.00 |
| 5 | எல்லைச் சுவர் அமைத்தல் (மீற்றர்) | 175.00 | 200.00 |
| 6 | தொலைத்தொடர்பு மற்றும் வானிலை வாங்கிக் கோபுரம் (மீற்றர்) | உயரத்தின் ஒவ்வொரு 5 மீற்றரிற்கும் ரூ. 10,000.00 | |

*கட்டட அனுமதி பெற்று ஒருவருட காலத்திற்குள் வேலை பூர்த்தி செய்யப்படாத கட்டடங்களுக்கு மேலதிக வருடங்கள் ஒவ்வொன்றிற்கும் தண்டமாக சதுர மீற்றர் ஒன்றுக்கு ரூபா 75.00 அறவிடப்படும்.*

*09 - 13/1*

## வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை

### நெல்லியடி நகர பிரதான வீதிகளின் இருபக்கமும் வாகனங்கள் நிறுத்துவதை தடை செய்தல், வாகனத்தரிப்பிடத்தை அமைத்தல் மற்றும் வாகனத் தரிப்பிடத்தை பயன்படுத்தும் வாகனங்களுக்கான கட்டணம் அறவிடுதல் - 2020

*வடக்கு மாகாண உள்ளூராட்சி விடயங்களுக்குப் பொறுப்பான அமைச்சரினால் தயாரிக்கப்பட்டு 2016.02.02 ஆந் திகதிய 1952/16 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் IV(அ) வெளியிடப்பட்டு வடக்கு மாகாண சபையால் 2017.02.21 ஆந் திகதி அங்கீகரிக்கப்பட்டு 2017.03.24 ஆந் திகதிய 2011/25 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் IV(அ) இல் பகுதியில் பிரசுரிக்கப்பட்டதுமான வடக்கு மாகாண பிரதேச சபைகளுக்கான துணைவிதிகளின் அத்தியாயம் 4 பகுதி II இல் குறிப்பிடப்பட்ட துணைவிதிகளுக்கிணங்கவும் மற்றும் இத்துணை விதிகளை ஏற்றுக்கொள்வது தொடர்பாக வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையால் 2017.07.07. ஆந் திகதிய 2027 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் IV(ஆ) பிரிவில் வெளியிடப்பட்ட தீர்மானத்திற்கிணங்கவும் நெல்லியடி நகர பிரதான வீதிகளின் இருபக்கமும் வாகனங்கள் நிறுத்துவதை தடை செய்தல், வாகனத் தரிப்பிடத்தை அமைத்தல் மற்றும் வாகனத் தரிப்பிடத்தை பயன்படுத்தும் வாகனங்களுக்கான கட்டணம் அறவிடுதல் தொடர்பாக 2020.06.18 ஆந் திகதிய 27/2020.06.18 ஆம் இலக்க சபை தீர்மானத்தின் மூலம் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.*

*த. ஐங்கரன்,*
*தலைவர்,*
*வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேசசபை,*
*கரவெட்டி.*

*பிரதேச சபை அலுவலகம்,*
*கரவெட்டி,*
*2020, ஓகத்து 11.*

#### வாகனத் தரிப்பிடம்

*வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை எல்லைக்குள் நெல்லியடி நகர பிரதான வீதிகளின் இரு பக்கமும் வாகனங்கள் நிறுத்துவதை தடை செய்வதற்கும் நெல்லியடி பழைய சந்தைப்பகுதியில் வாகனத்தரிப்பிடத்தை அமைப்பதற்கும் அவ்வாகன தரிப்பிடத்தை பயன்படுத்தும் வாகனங்களுக்கு பின்வரும் அட்டவணைப்படி கட்டணம் அறவிடுவதற்கும் தீர்மானிக்கப்படுகின்றது.*

#### அட்டவணை

| | வாகன விபரம் | கட்டணம் (ரூபா) |
|---|---|---|
| 1 | சைக்கிள் | 5.00 |
| 2 | மோட்டார் சைக்கிள் | 10.00 |
| 3 | முச்சக்கர வண்டி | 20.00 |
| 4 | மென்ரக வாகனங்கள் | 30.00 |
| 5 | கனரக வாகனங்கள் | 50.00 |

*09 - 13/2*

**அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்குமுரிய புதிய விகிதங்கள்**
**2014 சனவரி 01 ஆந் திகதி தொடங்கி அமுலுக்கு வந்தது**
**"இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை"**
**(வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படுவது.)**

**இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.**

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் விளம்பரதாரர்களே பொறுப்பாளராவார்.

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் **அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8** அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. அலுவலக நேரம் மு. ப. 8.30 மணி முதல் பி. ப. 4.15 மணி வரையாகும்.

4. பணம் கொடுக்கல் வாங்கல் மு. ப. 9.00 மணி முதல் பி. ப. 3.00 மணிவரை நடைபெறும்.

5. **சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படுதல் வேண்டும்.** தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகரின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும். தபால் அலுவலகம், "பொரல்லை" என்பதே காசுக் கட்டளைகளுக்கான செலுத்தப்படும் அலுவலகமாகும்.

6. **நகலைக் கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் ரைப் அடித்தல்** பிழைகளையும் காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும். கையெழுத்துப் பிரதி எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

7. **கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.**

8. வியாபார விளம்பரங்களும் பெயர் மாற்றம் பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுக்கப்பட வேண்டிய விளம்பரங்கள் 'சுப்றீம் கோட்' புறொக்டரால் கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்பட மாட்டா.

10. அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து பின்வருமாறு :-

| | ரூபா | ச. |
|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய | 137 | 00 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலமும் அல்லது அதன் பகுதிக்கும் | 137 | 00 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் அரைப் பக்கம் | 1,300 | 00 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் | 2,600 | 00 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. **வெள்ளிக்கிழமை தோறும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி** வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. **ஒவ்வொரு மாதமும் முதற்கிழமை வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் "அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8" அவர்கட்கு சகல அறிவித்தல்களும் விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.**

13. **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி கிடைக்கப் பெறாமை முகவரி மாற்றம் போன்ற எல்லாத் தொடர்புகளுக்கும், கொழும்பு 8, அரசாங்க அச்சுத் திணைக்களம், அரசாங்க அழுத்தகர் என்ற முகவரிக்கு அறிவியுங்கள்**

14. **2014 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து மீளவாய்ந்த புதிய சந்தா விபரம் :-**

| இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி (வருடத்திற்கு) | முழு வருடத்திற்குமான கட்டணம் ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I ஆவது பகுதி : | | |
| I ஆவது தொகுதி | 4,160.00 | 9,340.00 |
| II ஆவது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 580.00 | 950.00 |
| III ஆவது தொகுதி (ஆக்க உரிமை மற்றும் வியாபார உரிமை அடையாள விளம்பரங்கள் முதலியன) | 405.00 | 750.00 |
| I ஆவது பகுதி முழுவதும் (I, II, III தொகுதிகள் உட்பட) | 890.00 | 2,500.00 |
| II ஆவது பகுதி (சட்ட சம்பந்தமானது) | 860.00 | 450.00 |
| III ஆவது பகுதி (காணிகள்) | 260.00 | 275.00 |
| IV ஆவது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 2,080.00 | 4,360.00 |
| V ஆவது பகுதி (பயண போக்குவரத்து சேவை முதலிய விண்ணப்பங்களுக்கான பட்டியல் மற்றும் புத்தகப் பட்டியல்) | 1,300.00 | 3,640.00 |
| VI ஆவது பகுதி (யூரிமார் பெயர்ப்பட்டியல், வைத்திய அலுவலர் பட்டியல், பிறப்பு, இறப்பு பதிவாளர் பட்டியல் முதலியன) | 780.00 | 1,250.00 |
| அதிவிசேட வர்த்தமானி | 5,145.00 | 5,520.00 |

**முழு ஆண்டின் இறுதி வரைக்கும் பன்னிரண்டு மாதங்களுக்குக் குறையாத காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்படும்.**

**தனிப்பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்**

| | விலை ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I ஆவது பகுதி : | | |
| I ஆவது தொகுதி | 40.00 | 60.00 |
| II ஆவது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 25.00 | 60.00 |
| III ஆவது தொகுதி | 15.00 | 60.00 |
| I ஆவது பகுதி (I, II, III தொகுதிகள் உட்பட) | 80.00 | 120.00 |
| II ஆவது பகுதி | 12.00 | 60.00 |
| III ஆவது பகுதி | 12.00 | 60.00 |
| IV ஆவது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 23.00 | 60.00 |
| V ஆவது பகுதி | 123.00 | 60.00 |
| VI ஆவது பகுதி | 87.00 | 60.00 |

**எல்லா தனிப்பிரதிகளையும் கொழும்பு 5, பொல்ஹேன்கொடை, கிருளப்பனை மாவத்தை, இல. 163 எனும் முகவரியிலுள்ள அரச வெளியீட்டு பணியகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.**

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொருத்து மாற்றப்படும்.*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ்க் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டாது. இனி வரப்போகும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.*

***அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்களை ஏற்றுக்கொள்வார்.***

***முக்கிய கவனிப்பு.*** *- இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான கட்டணங்கள் யாவும்* ***அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும்.***

***அட்டவணை - 2020***

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| **செத்தெம்பர்** | .. | வெள்ளி | 04.09.2020 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 21.08.2020 |
| | | வெள்ளி | 11.09.2020 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 28.08.2020 |
| | | வெள்ளி | 18.09.2020 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 04.09.2020 |
| | | வெள்ளி | 25.09.2020 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 11.09.2020 |
| **ஒற்றோபர்** | .. | வெள்ளி | 02.10.2020 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 18.09.2020 |
| | | வெள்ளி | 09.10.2020 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 25.09.2020 |
| | | வெள்ளி | 16.10.2020 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 02.10.2020 |
| | | வெள்ளி | 23.10.2020 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 09.10.2020 |
| | | வியாழன் | 29.10.2020 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 16.10.2020 |
| **நவெம்பர்** | .. | வெள்ளி | 06.11.2020 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 23.10.2020 |
| | | வெள்ளி | 13.11.2020 | .. | நண்பகல் 12 | வியாழன் | 29.10.2020 |
| | | வெள்ளி | 20.11.2020 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 06.11.2020 |
| | | வெள்ளி | 27.11.2020 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 13.11.2020 |

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2020 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*